விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 13 சனிக்கிழமை (27.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 159

# வன்முறைகள் மோசமடையுமுன் அதனை தடுத்து நிறுத்துங்கள்!

## அரசு-புலிகளுக்கு எரிக் அவசர வேண்டுகோள்

இலங்கையில் தற்பொழுது நிலவும் வன்முறைகள் இன்னும் மோசமடைய லாம். இவ் வன்முறைகள் மோசமான நிலையை அடைவதற்கு முன்னர் அரசும் விடுதலைப்புலிகளும் அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டு மென இலங்கைக்கான சமாதானத் தூது வரும் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சருமான எரிக்சொல் ஹெய்ம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியாவுக்குச் செல்லும் வழியில் கட்டுநாயக்கா விமான்நிலையத்தில் வைத்து ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)



சமாதானப் பேச்சுக்குறித்து நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட அரச மற்றும் நோர்வேக்குழுவினரை படத்தில் காணலாம்.

## கருணா குழு மீது தாக்குதல் மூவர் பலி; இருவர் கைது

### விடுதலைப்புலிகள் அறிவிப்பு

திருகோணமலை மூதூரில் முன்னரண் பகுதியை நோக்கி நகர்ந்த கருணா குழு மீது விடுதலைப்புலிகளின் சிறப்புப்படையினர் நடத்திய தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

திருகோணமலை மூதூர் தோப்பூர் பட்டியடி இராணுவ முகாமில் இருந்து விடுதலைப் புலிகளின் முன்னரண் பகுதி நோக்கி இக் குழுவினர் நேற்று முன்னேறியபோது அவர்கள் மீது புலிகளின் சிறப்பு அணியினர் தாக்குதலை நடத்தினர்.

இதில் துணை இராணுவக்குழுவினர் மூவர் உயிரிழந்தனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இருவர் கைதுசெய்யப்பட்ட இச் சம்பவத்தின் போது துணை இராணுவத்தினருக்கு ஆதரவாக சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் படைமுகாம் அருகில் கிடந்ததாகவும் படையினர் தாக்குதல் நடத்திக்கொண்டே அச் சடலங்களை எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ச-5)

## நியாப் மாகாண பிரதிப் பணிப்பாளர் ரட்ணராஜா நேற்று சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்தித்திட்ட மாகாணப் பிரதிப் பணிப்பாளர் ரட்ணம் ரட்ணராஜா (வயது 48) ஆயுதக்குழுவினால்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் மட்டக்களப்பு கல்வியங்காட்டுப் பகுதியில் அவரது வீட்டிற்கு அருகில் வைத்து நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கல்முனையைச் சொந்த இடமாகக் கொண்ட பொறியியலாளரான இவர் உலக வங்கியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வடக்கு கிழக்கு நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் பொறுப்பாக பதவியாற்றி வருகிறார்.

இவரது பதவியைப் பயன்படுத்தி தமது உறவினர்கள் சிலரை முக்கிய பதவிக்கு அமர்த்துமாறு துணை இராணுவக்குழுவைச் சேர்ந்த ஒருவர் அவருக்கு அழுத்தம் கொடுத்து வந்தாகவும் துணை ஆயுதக்குழுவின் இந்த மிரட்டலுக்கு அடிபணியாத ரட்ணராஜாவுக்கு அண்மைக்காலமாக அடிக்கடி தொலைபேசிமூலம்கொலைமிரட்டல்விடுக்கப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-05)

## மோ.சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் நேற்று சுட்டுக்கொலை

### திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் இரு இளைஞர்கள் நேற்று பகல் 1.30 மணி யளவில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இவர்களை இராணுவம் சோதனையிட முற்பட்ட வேளை அவர்கள் தப்பியோட முயற்சித்தபோதே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது குறிப்பிட்ட இரு இளைஞர்களும் மோட்டார் சைக்களில் திருநெல்வேலி பழஞ்சந்தி வழியாக சென்று கொண்டிருந்தபோது அப்பகுதியில் நின்ற இராணுவச் சிப்பாய் அவர்களை மறித்துள்ளார்.

வேகமாக வந்த அவர்கள் சற்றுத் தொலைவில் மோட்டார் சைக்கிளை நிறுத்தியபோது வேறு ஒரு சிப்பாய் அவர்களை சோதனையிட முற்பட்டுள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வந்த சொல்ஹெய்ம் நேற்றே இந்தியா பயணமானார்

(கொழும்பு)

நோர்வேயின் சர்வுதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினர்.

நேற்றுக் காலை கொழும்பு வந்த அவர் உடனடியாகவே ஜனாதிபதியைச் சந்தித்தார். பேச்சுக்கள் இரகசியமாகவே நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சந்திப்பினை முடித்துக் கொண்ட சொல்ஹெய்ம் நேற்று மாலையே புதுடில்லி பயணமானார்.


புதுடில்லி சென்ற எரிக்சொல் ஹெய்ம் 2003 ஏப்ரலில் விட்டு வெளியேறிய பேச்சு மேசைக்கு புலிகளை அழைத்து வருவதற்கு தான் மேற்கொண்டுவரும் பணிகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கவுள்ளார். (ச-6)

# ஜெனீவாப் பேச்சுக்களின்பின் 193பேர் கொல்லப்பட்டுள்ளனர்

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுவார்த்தை



யின் பின்னர் இடம்பெற்ற தாக் குதல்களில் படையினர் உட்பட 193பேர் கொல்லப்பட்டுள்ளனர். 306பேர் படுகாயமடைந்துள்ள னர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்க ளத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறு கையில், தமிழீழ விடுதலைப்புலிக ளின் தாக்குதலில் ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் 125 படை யினர் உயிரிழந்துள்ளனர். 182 பேர் படுகாயமடைந்துள்ளனர். அதேபோன்று பொதுமக்கள் 68 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 124 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த வாரம் மட்டும் யாழ்ப் பாணம், வவுனியா, திருகோண மலை மற்றும் மட்டக்களப்பு பகு திகளில் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களில் நான்கு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் படுகாயமடைந்துள்ளனர். கள் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். புலிகளின் கைக் குண்டுத்தாக்குதல் மற்றும் கிளை மோர் தாக்குதலினாலேயே இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

படையினரை இலக்கு வைத்து புலிகள் தாக்குதல் நடத்தும்போது சில சந்தர்ப்பங்களில் படையினர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது மூன்று புலிகள் கடந்தவாரம் மட்டும்பலியாகியுள்ள னர். படையினர் பதில் தாக்குதல் நடத்தும் போதும் பொதுமக்க ளை யும் கவனத்தில் கொள்ளவேண் டியுள்ளது.

சமாதானத்தில் அக்கறையற் றவர்களாக புலிகள் தொடர்ந் தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். போர் நிறுத்த உடன் படிக்கைக்குப் பின்னர் புலிகள் முதன்முறையாக கண்ணி வெடித் தாக்குதலையும் மேற்கொண் டுள் ளனர். இதில் படையினர் இருவர் படுகாயமடைந்தனர் என்றார்.(து)

சிறு விளம்பரம்

SPOKEN ENGLISH

ஓய்வுபெற்ற உத்தியோகத்த ரினால் வீடுகளுக்கு வந்து குறுகிய காலத்திற்குள் ஆங்கிலம் பேசக் கற்றுக்கொடுக்கப்படும் வெளிநாடு செல்பவர்களுக்குசிறந்தது.தொடர்பு- K.சோமசுந்தரம், இல.6 மாவத்தை ஒழுங்கை, சுதுமலைதெற்கு, மானிப் பாய். Tel:- 021-4591001

(435)

## பிரி.கடற்படைத்தளபதி இலங்கை வருவார்

பிரித்தானிய கடற்படைத் தள பதி அற்மிறல் யொனதற்வெம் எதிர்வரும்முதலாம்திகதி இலங்கை வரவுள்ளார்.

அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலர்கோட்டாயராஜபக்ஷ, கடற் படைத் தளபதி வசந்த கருணா கொட, வான்படைத்தளபதிடொனில் பெரராவை சந்திக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (து-9)

# ஐ.நா.படைகள் இலங்கைக்குவரும் விதத்தில் அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன

## ராஜித சேனாரட்ண சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கியநாடுகள்சபைதீர்மானம் எடுத்தால் இலங்கைக்கு சர்வதேச பாதுகாப்புப்படை வருவதனை எவராலும் தடுக்க முடியாது ஐ.நா. சபையின் பாதுகாப்புப்படையி னர் இலங்கைக்கு வரும் விதத்தி லேயே அரசாங்கத்தின் செயற் பாடுகள் அமைந்துள்ளன. என்று ஐ.தே.க.வின் களுத்துறை மாவட்ட எம்.பி.ராஜித சேனாரட்ண தெரி வித்தார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட் சித்தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ராஜித சேனா ரட்ண மேலும் கூறுகையில்,

அண்மையில் எமது நாட் டுக்கு வருகை தந்த ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி, சர்வதேச பாது காப்புப் படை இலங்கை வருவது தொடர் பாக கருத்து வெளியிட்டிருந்தார். இந்த விடயத்தை நாம் இலகு வாக எடுத்துக்கொள்ள முடியாது.

ஒருநாட்டுக்குஅமைதிப்படையை அனுப்ப வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்தால் அதனை யாராலும் நிறுத்தவோ தடுக்கவோ முடியாது. அமைதிப் படை இலங்கைக்கு வந்தால் அவர் கள் வடகிழக்கு எல்லைகளில் கட மைபுரிவார்கள். தாக்குதல் நடத் தும் எந்தத் தரப்பினருக்கும் எதிரா கவும் சர்வதேச அமைதிப்படை தாக்குதல் நடத்தும். சில காலத் தின்பின்னர்பிரச் சினையை தீர்க்க முடியாது என்று சர்வதேச சட்டத் தின் பிரகாரம் வட கிழக்கை தனி யாக பிரித்துக் கொடுக்குமாறும் அமைதிப்படை ஐநாவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் அதன் பின்னர் நாடு பிரிவதனை யாராலும் நிறுத்திவிட முடியாது.

இதற்கு சைப்பிரஸ் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் சிறந்த உதாரணங்களாகும். ஐக் கிய நாடுகள் சபையின் அமை திப்படை இதுவரை 31நாடுகளுக் குச் சென்றுள்ளது. ஆனால் எமது நாட்டின் அரசாங்கம், பங் காளிக் கட்சியான ஜே.வி.பிஜாதிக, ஹெல உறுமய என்பன இவ்விடயங்க ளின் ஆழம் தெரியாமல் செயற் படுகின்றன. ஜே.வி.பியினர் யசூசி அகாஷியிடம் அமை திப்படை தேவையில்லை என்று கூறினா லும் ஆகப்போவது ஒன்று மில்லை. இவர்கள் கிணற் றுக்குள் இருந்து கொண்டு அரசியல் நடத்துகின் றனர் என்றார். (து)

## இராசி பலன்

**27.05.2006**

**(வைகாசி 13, சனிக்கிழமை)**

**அமாவாசை பிற்பகல் 11.22 மணிவரை**

**கார்த்திகை முற்பகல் 8.03 மணிவரை**

**இராகுகாலம் 8.52-10.22மணிவரை**

**சுபநேரம் 2.52-4.22 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அமைதிக்குறைவு, எடுத்தகாரியம் தாமத மாகும், திடீர் நன்மை, விவாதம். |
| இடபம் | நல்லமுயற்சி, ஆரோக்கியம், போசன சுகம், உஷ்ண நிலை. |
| மிதுனம் | உறவினர் மனஸ்தாபம், வீண் அலைச் சல், சுபசெலவு, முயற்சிதாமதம். |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, பெரியோர் உதவி, கலந்துரையாடல். |
| சிங்கம் | அதிக பிரயாசை, உற்சாகம், காரிய சித்தி, பாராட்டு. |
| கன்னி | தர்மம், பித்தரோகம், தேகாந்திரவாசம், காரிய தாமதம். |
| துலாம் | ஆரோக்கியக்குறைவு, வாகனபயம், மனச்சோர்வு, போசனசுகம். |
| விருச்சிகம் | அபூர்வசந்திப்பு, காரிய அனுகூலம், விருந்துபசாரம், நல்ல வரவேற்பு. |
| தனுசு | சத்துரு ஜெயம், நல்லமுயற்சி, தேக நலன், தொழில்நன்மை. |
| மகரம் | குடும்பக்கவலை, பணக்குறைவு, காரிய இடையூறு, ரோகநிலை. |
| கும்பம் | வாகன சுகம், உறவினர் வருகை, நல்ல முயற்சி, போசனசுகம். |
| மீனம் | அந்நியர் சந்திப்பு, குடும்பமகிழ்ச்சி, கூட்டுமுயற்சி, உடல்நலம். |

- வளவன்

## தேடுதல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை

கொழும்பு நகரில் மேற்கொள்ளப்படும் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் பொதுமக்களை கோரியுள்ளார். பாதுகாப்பு காரணங்களுக்காக நேற்று முன்தி னம் காலை 6.00 மணியிலிருந்து கொழும்புக் கோட்டை உலக வர்த்தக மையத்திற்கு முன்னால் இருக்கும் வங்கிமாவத்தை மறு அறி வித்தல்வரை மூடப்பட்டது.

சந்தேகத்திற்கு இடமான நபர்கள் அல்லது செயல் களை கண்ணுற்றால் அது தொடர்பான விபரங்களை ஏதாவது ஒரு பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கு மாறும் பொலிஸ்மா அதி பர் அறிவித்துள்ளர். (து-9)

## வீடமைப்பு திட்டத்தின்கீழ் 112 பயனாளிகளுக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

4000 வீடுகள் அமைக்கும் உலக வங்கியின் வீடமைப்பு புனரமைப்பு திட்டத்தின் கீழ் தெரிவு செய் யப்பட்டுள்ள பயனாளிகளில் சண்டிலிப்பாய் பிர தேசத்தை சேர்ந்த 122பயனாளிகளில் 30 பேருக் கும், தெல்லிப்பளைப் பிரதேசத்தை சேர்ந்த 135 பயனாளிகளுள் 82 பேருக்குமான முதற்கட்டக் கொடுப்பனவான 50ஆயிரம் ரூபா அவ்வவ் வங்கி களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதித்திட் டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

மேலும் ஏனையவர்களுக்கான கொடுப்பனவு கள் இரண்டு வார காலப்பகுதிக்குள் அனுப்பிவைக் கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (132,133)


## குடிநீர் விநியோகம்

(காரைநகர்)

கரைநகரில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, குடிநீர் விநியோகத்தினை விஸ்தரித்துள்ளது.

கடந்த மாதத்தில் இருந்து காரைநகர் மத்தி கிரா மத்தில் ஐந்து நீர்விநியோக நிலையங்கள் அமைக் கப்பட்டு நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கடந்த 20ஆம் திகதி தொடக்கம் தங்கோடைத வேம் படி ஆகிய கிராமங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும் ஐந்து நீர்விநியோக நிலையங்கள் மூலம் நீர் விநி யோகிக்கப்பட்டு வருகின்றது.

காலையில் ஏழு மணி தொடக்கம் எட்டு மணி வரைக்கும், மாலையில் நான்கு தொடக்கம் ஐந்து மணி வரைக்கும் நாளிற்கு இரு மணி நேரம் நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதனால் காரை நகரில் நிலவும் குடிநீர்ப்பிரச்சினை ஓரளவு தனிந் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-246)







நேற்றைய தினம் திருநெல்வேலி பழம் சந்தையடியில் இராணுவத்தி னரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக் கிச் சூட்டில் மரணமடைந்தவர்கள் பய ணித்த மோட்டார் சைக்கிளை முத லாவது படத்திலும், சுட்டுக்கொல்லப்பட்ட இருவரது சடலங்களையும், விசார ணையை யாழ்.மாவட்ட மேலதிக நீதி பதி ஸ்ரீநிதி நந்தசேகரம் மேற் கொள் வதையும் ஏனைய படங்களிலும் காணலாம். (படங்கள்:- சதீஸ்)



# ஈழத்தமிழ் அகதிகளைப் பார்வையிட்டார் இந்திய எல்லைப் பாதுகாப்பு அதிகாரி

இந்திய மத்திய அரசின் உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் பொலிஸ் அதிபர் அலெக்ஸாண்டர் டானியல், மண்டபம் அகதி முகாமுக்குச் சென்று இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினைகளையும் குறைநிறைகளையும் கேட்டறிந்தார்.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துவரும் அதேசமயம் அதற்கமைய அகதி முகாம்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

அதேவேளை அகதிகள் என்ற போர்வையில் தமிழ்நாட்டிற்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவக் கூடாது என்பதிலும் அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் அகதிகளிடம் நேரடி விசாரணைகளை நடத்துவதற்காக கடந்த புதன்கிழமை புதுடில்லியிலிருந்து மதுரை வந்த இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் பொலிஸ் அதிபர் அலெக்ஸாண்டர் டானியல், நேற்று முன்தினம் மண்டபம் அகதி முகாமிற்குச் சென்று அகதிகளுடன் நேரடியாகவே கலந்துரையாடினார்.

இந்தப் பயணத்தின் பின்னர் அவர் தமிழகத்திற்கு இலங்கை அகதிகள் வருவது குறித்து மத்திய பாதுகாப்பமைச்சிற்கு அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (து)


சுன்னாகம்

கதிரமலைச் சிவன் மஹோற்சவம்

14ஆம் நாள்
இன்று சண்டேஸ்வர ஆசார்ய
உற்சவக் காட்சி

நன்னலம் தரும்வலம் வரவே

பொன்னார் மேனியினாளுடன் சுன்னாகம் மேவிய
பொன்னம் பலமுடை யீரே
பொன்னம் பலமுடை யீரும கதிர்மலை
நன்னலம் தரும்வலம் வரவே

–சிவ சண்முகவடிவேல்


## திரைப்படத்திற்கு தடைவிதிப்பு

(கொழும்பு)

'த டா வின்சி கோட்' என்னும் திரைப்படம் இலங்கையில் திரையிடப்படுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது என ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதியால் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரைப்பட மாளிகைகள், தொலைக்காட்சி சேவைகள் ஆகியவற்றில் இத்தடை விதிப்புக்கிணங்க இந்த ஹொலிவூட் படம் திரையிடப்படமாட்டாது. (து)

# வன்செயல்களைக் கைவிடுங்கள்

## சமாதானப் பேரவை இருதரப்பிடமும் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம், அங்கத்துவ நாடுகள் மத்தியில் தடையைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்திருப்பது இன்று நாட்டில் தலைவிரித்தாடும் வன்முறைகள் மேலும் அதிகரிப்பதற்கே வழிவகுக்கும். அத்தோடு எதிர் விளைவுகளைத் தரும்.

எனவே ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இயைவாக எடுக்கவேண்டிய நடவடிக்கையாதெனில், சம்பந்தப்பட்ட இருதரப்புகளும் உடனடியாக அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதேயாகும்.

வன்செயல்களில் ஈடுபடுவது தீர்மானத்துக்கான பதிலாகாது என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும்,

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் புலிகள் மீது தடைகொண்டுவரப்படுவதை மட்டுமல்ல மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரிப்பு பற்றியும் இதன் பின்னணியில் அரசும் புலிகளும் இருந்துவருவது பற்றியும் சுட்டிக்காட்டி அதனைக் கண்டித்திருக்கிறது. வன்செயல்கள் இடம்பெறுவதையும் கண்டித்திருக்கிறது.

எனவே இந்த நிலையில் இரு தரப்பினரும் உடனடியாகச் செய்ய வேண்டியது பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்கான அறிகுறியை, வன்முறைகளை நிறுத்திவைப்பதன் மூலம் எடுத்துக்காட்டுவதாகும்.

அத்தோடு ஐரோப்பிய யூனியன் தனது தீர்மானத்தில் சுட்டிக் காட்டியிருக்கும் விஷயங்களை கவனத்தில் எடுத்து நோர்வேயின் அனுசரணையோடு அவற்றை நிவர்த்திப்பதற்கான பேச்சுகளை ஆரம்பிப்பதே அசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# தமிழகம் சென்ற அகதிகள் கடற்படையினரால் கைது!

(மன்னார்)

மன்னார்க் கடல் வழியாக தமிழகம் சென்ற 120 க்கும் மேற்பட்ட அகதிகளை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

5க்கும் மேற்பட்ட படகுகளில் சென்ற இவர்களை வழிமறித்த கடற்படையினர் தமிழகம் செல்லவிடாது தடுத்து கைது செய்து தலைமன்னார் பொலிஸிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனை அடுத்து கடற்படையினரின் அழைப்பின் பேரில் மன்னார் உதவி அரச அதிபர் தலைமன்னார் சென்றுள்ளார்.

திருகோணமலையிலிருந்து மன்னார் ஊடாக தமிழகம் செல்லும் அகதிகளை வழிமறித்து அவர்களை மீண்டும் திருகோணமலைக்கு அனுப்பும் முயற்சியின் பிரதிபலிப்பாகவே கடற்படையினரின் இந்த செயற்பாடு அமைந்துள்ளதாகவும், படையினரின் அச்சுறுத்தல் காரணமாக இடம்பெயரும் மக்களுக்கு படையினர் தொடர்ந்தும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இந்த விடயத்தை மனித உரிமைகள் அமைப்புகள் கண்டிக்க வேண்டுமென இது தொடர்பில் கருத்து தெரிவித்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (து)

# இடம்பெயர்ந்தோர் நலன் கருதி தற்காலிக நிவாரண முகாம்கள்

(கொழும்பு)

சமீபத்திய அசம்பாவிதங்கள் தொடர்பாக இடம்பெயர்ந்தோர் நலன்கருதி திருகோணமலையிலும் மன்னாரிலும் தற்காலிக நிவாரண முகாம்களை நிறுவுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் ஜனாதிபதியின் செயலாளரால் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆளுநர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், திறைசேரி செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் பேச்சுவார்த்தைக்கான சமாதான செயலக செயலாளர் நாயகம், பாதுகாப்பு உயரதிகாரி, தளபதிகள், வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர், திருகோணமலை, மன்னார் அரசாங்க அதிபர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோரும் பங்குபற்றினர்.

இடம்பெயர்ந்தோர் முன்னைய இடங்களுக்குத் திரும்புவதற்கு வழி செய்யும் பொருட்டு இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் அதில் தீர்மானிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்தோர் தொடர்பான பல்வேறு விவகாரங்கள் தொடர்பாகவும் இதில் மிக விரிவாக ஆராயப்பட்டது. தற்காலிக நிவாரண நிலையங்கள், அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களால் நிருவகிக்கப்படும். வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரோடும் மாகாண நிருவாகத்தோடும் இணைந்து இவர்கள் செயற்படுவார்கள். (து)

# இராணுவ கெடுபிடி காரணமாக திருமலை மக்கள் இடம்பெயர்வு

## மன்னார் ஆயர் தெரிவிப்பு



(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து மக்கள் படையினரின் அச்சம் காரணமாகவே இடம்பெயர்ந்து வருகின்றார்கள். இந்த விடயத்தை இடம்பெயர்ந்த மக்கள் தனக்கு தெரிவிப்பதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து மன்னார் ஊடாக தமிழகம் செல்லும் மக்கள் எதிர்நோக்கி வரும் சிரமங்கள் குறித்து கருத்து தெரிவித்த ஆயர்,

திருகோணமலை மக்கள் இடம்பெயர்ந்து தமிழகம் செல்லும்போது எதிர்நோக்கும் சம்பவங்கள் குறித்து நாமும் கவலையடைகின்றோம். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் பேசாலையிலும் தலை மன்னாரிலும் உள்ள தேவாலயங்களில் தங்கியிருக்கின்றார்கள்.

இருப்பினும் இவர்கள் தமிழகம் செல்லும்போது எதிர்நோக்கும் இன்னல்கள் குறித்த விடயங்களை நாங்கள் அறிந்துகொண்டே இருக்கின்றோம்.

இது தொடர்பில் அரச அதிபரிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் பேச்சுக்களை நடத்தி மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களைப் போக்குவது குறித்து ஆராய இருக்கிறோம் என்றார்.

எனினும் இது தொடர்பில் தாம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புகொண்டு நிலைமைகளை விளக்கியபோது மன்னார் வந்திருக்கும் மக்களை மீண்டும் திருகோணமலைக்கு அனுப்புமாறு பாதுகாப்பு அமைச்சு தம்மிடம் கோரியதாகவும் இந்நிலையில் இடம்பெயர்ந்து மன்னார் வந்த மக்களை எக்காரணம் கொண்டும் மீண்டும் திருமலைக்கு அனுப்பமுடியாது என பாதுகாப்பு அமைச்சுக்கு தாம் கூறியதாகவும் ஆயர் தெரிவித்தார்.

இராணுவக் கெடுபிடிகள் காரணமாக தமது உயிருக்கு அஞ்சி இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் தமது சொந்த இடத்திற்கு செல்லுமாறு கோருவது மனித உரிமைக்கு அப்பாற்பட்டது என்பதை தாம் பாதுகாப்பு அமைச்சுக்கு சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவித்த ஆயர் மேலும் இடம்பெயரும் மக்களுக்கும் புகலிடம் அளிப்பது தமது கடமையென்றும் குறிப்பிட்டார். (து)

## படுகொலைச் சம்பவங்களால் ஐ.நா. உயரதிகாரி கவலை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் பொதுமக்கள் மீதான படுகொலைச் சம்பவங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் உயரதிகாரி கவலை தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மீதான படுகொலைச் சம்பவங்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவது மட்டுமல்லாமல் மனித உரிமைகள் குறித்த சர்வதேச மனிதாபிமானச் சட்ட விதிகளையே மீறுகின்றன என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய இலங்கை நிலவரம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (து)

# புலனாய்வு அமைப்புகளிடையே தென் தமிழீழத்தில் நிழல் யுத்தம்

தென் தமிழீழத்தில் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளிடையே நிழல் யுத்தம் தீவிரம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. இனரால் இயக்கப்படும் ஜிகாத் குழுவினர் தமது தீவிர செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர். இவர்களது முக்கிய நடவடிக்கைகளை கவனிப்பதற்கு இந்திய புலனாய்வு நிறுவனமான றோ தனது புலனாய்வாளர்களை அண்மை நாட்களில் அதிக எண்ணிக்கையில் தென் தமிழீழத்திற்கு அனுப்பி வைத்திருந்தது.

இந்திய புலனாய்வாளர்களின் வருகையால் அதிருப்தி அடைந்துள்ள பாகிஸ்தான் புலனாய்வாளர்கள், றோ புலனாய்வாளர் என அடையாளம் காணப்பட்ட விஜயகுமார் என்பவரை கடத்திச் சென்று படுகொலை செய்துள்ளனர்.

இதேவேளை ராதாகிருஷ்ணன் என்பவர் கடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் வியாபாரிகள் போல் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் நடமாடி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## இன்று ஒரு தகவல்

# இல்லாமல் இருத்தல்

ஒரு பேராசிரியர் ஒரு குருவைத் தேடி வந்தார். ஜப்பானிய குரு. அவரது பெயர் நான் இன். Nan-In. அவரிடம் பேசவேண்டும். விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசை அவருக்கு. அந்தக் குரு ஒரு குடிசையில் இருந்தார். இந்தப் பேராசிரியர் நீண்டதூரம் நடந்து அந்தக் குடிசைக்கு வந்து சேர்ந் தார்.

குரு பார்த்தார்."நீங்கள் மிகவும் களைப்பாகக் காணப்படுகிறீர்கள். இளைப்பாறுங்கள்... உங்களுக்குத் தேநீர் தயாரிக்கிறேன்... ஒரு கப் தேநீர் பருகிவிட்டு அதன்பின் நாம் கலந்துரையாடலாம் என்று சொல்லி விட்டு தேநீர் தயாரிப்பதற்காக வெந்நீர் கொதிக்க வைத்தார். அதே சமயம் பேராசிரியரையும் லேசாகக் கவனித்தார்.

ஒரு புறம் தண்ணீர் கொதிக்கிறது. இன்னொரு பக்கம் பேராசிரியரும் கொதித்துக் கொண்டிருக்கிறார். தேநீர் பாத்திரத்திலிருந்தும் சத்தம் வந்து கொண்டிருக்கிறது. பேராசிரியரிடமிருந்தும் சத்தம் வந்து கொண்டிருக் கிறது. ஏனென்றால் அவர் தனக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தார்.

அதாவது இந்தக் குருவிடம் என்ன கேட்பது. எப்படிக் கேட்பது. எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தன்னைத் தானே தயார் செய்து கொண்டிருக்கிறார்.அந்தப் பக்கம் தேநீரும் தயாராகி விட்டது. அந்தக் குரு சிரித்துக் கொண்டே கதையெல்லாம் கவனித்தார். அதன்பின் ஒரு கோப்பையில் தேநீரை ஊற்ற ஆரம்பித்தார். பேரா சிரியர் தேநீர் கோப்பையை கவனித்துக் கொண்டி ருந்தார்.

கோப்பை நிரம்பிவழிய ஆரம்பித்தது. 'நிறுத்துங்கள்' என்று கத்தினார் பொறுக்கமுடியாமல்."கோப்பையில் இனிமேல் கொஞ்சம் கூட ஊற்றமுடியாது... உங்களுக்கு என்ன நடந்தது? என்றார். இப்போது அந்தக் குரு சொல் கிறார் . இதே நிலைமையில் தான் இப்போது நீங்களும் இருக்கிறீகள்...நீங்களும் உங்கள் சொந்தக் கருத்துக் களாலும் எண்ணக் கோட்டைகளாலும் நிறைந்திருக் கிறீ் நீங்கள் உங்கள் கோப்பையைக் காலி செய்யாத வரை நான் என்ன உங்களுக்குப் புதிதாகக் கொடுத்து விடமுடியும்?"என்றார்.

கோப்பை நிரம்பிவிட்டது... இனிமேல் கொள்ளாது என்ற விழிப்புணர்வு அந்தப் பேராசிரியருக்கு இருந்தது. ஆனால் தன்னைப் பற்றிய விழிப்புணர்வு அவருக்கு இல்லை. அவர் தன்னுடைய சொந்தக் கருத்துக்கள்... கோட்பாடுகள்... தத்துவங்கள்...இவற்றால் நிரப்பப்பட்டு பொங்கிவழிந்து கொண்டிருக்கிறார். அதனால் அந்தக் குரு என்ன சொன்னார் என்றால் "நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ளீர்கள். நான் உங்களுக்கு எதையும் கொடுக்க முடியாது. என்னைத் தேடி வருவதற்காக நீங்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கிறீர்கள். வீணாகப் பிரயாணம் செய்து வந்திருக்கிறீர்கள்...நீங்கள் உங்கள் கோப்பையைக் கொஞ்சம் காலியாக வைத்திருந்தால் நான் அதில் கொஞ்சமாவது ஊற்றமுடியும்" என்றார்.

கோப்பையைக் காலி செய் என்றால் மனதைக் காலி செய் என்று அர்த்தம். ஏனென்றால் அங்கே நான் என்ற ஆணவம் பொங்கிவழிந்து கொண்டிருக்கிறது. ஆணவம் அங்கே இருக்கும் வரைக்கும் வேறு எதையும் அங்கே கொண்டுபோய்ச் சேர்க்க முடியாது. கோப்பையைக் காலிசெய். இல்லாவிட்டால் அதை வீசி எறிந்துவிடு என்கிறார் ஓஷோ.

கோப்பையை எறிந்துவிடு என்று சொன்னால் அதற்கு பொருள் "நான் வெறும் புறமாக இருக்கிறேன் என்ற உணர்வு கூட இல்லாமல் இருக்கவேண்டும்" என்பதுதான். ஒருமுறை ஒரு சீடன் போதி தர்மரிடம் வந்தானாம். "குருவே நீங்கள் என்னை வெறுமையாக இருக்கச் சொன்னீர்கள். நான் இப்போது வெறுமை யானவன் ஆகிவிட்டான். நான் இனி என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டிருக்கிறான்.

போதி தர்மர் ஒரு தடியை எடுத்தார்... அவனது தலையில் அடித்துவிட்டுச் சொன்னார். "போய் அந்த வெறுத் தன்மையையும் எறிந்துவிட்டு வா" என்றார். நான் காலியாக இருக்கிறேன் என்றால் அதிலும் நான் இருக்கிறதல்லவா... அந்த நான் காலியாக இருக்க முடியாது... ஆகவே நீ வெறுமையானவன் என்று கூற முடியாது என்பது அவருடைய கருத்து. நமது ஆள் ஒருவன் ஒரு குருவிடம் போனான். எதுவுமே இல்லாமல் காலியாக வரவேண்டும். அப்போதுதான் உனக்குச் சொல்லிக்கொடுப்பேன் என்றார் குரு. அப்படித்தான் வந்திருக்கிறேன்" என்றான். "சரி முதலில் குரு தட்சணையை வை என்றார் அவர். அதுவும் இல்லாமல் தான் வந்திருக்கிறேன் குருவே"என்றான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இனப்பிரச்சினை ஐ.நா.வரை சென்றால் பாரியவிளைவை எதிர்நோக்க நேரும்

## டியூ குணசேகர

(கொழும்பு)

இனப்பிரச்சினை தற்போது சர்வதேச நாடுகள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசு இனப்பிரச்சினையை சர்வதேச மயப்படுத்த ஒரு போதும் அனுமதியாது என அரசியலமைப்பு விவகார சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டியூகுணசேகர சபையில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையை சிலர் ஐ.நா. வரை கொண்டு செல்வதற்கு முற்படுகிறார்கள். அது தவறு. அவ்வாறு ஐ.நா.வரை கொண்டு செல்லப்பட்டால் நாம் பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். இதனை நாம் அரசியல் ரீதியாகத் தீர்க்க முற்பட வேண்டும் .ஆவேசம் கொள்ளாது நிதானமாகச் சிந்தித்து செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தினர் மீதான தாக்குதல் தொடர்பாக ஜே.வி.பி சமர்ப்பித்த சபை ஒத்திவைப்பு வேலைபிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக் கையினால் தான் விடுதலைப் புலிகள் ஆட்கொலை நடவடிக்கை களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் போரா ளிகள் அல்ல. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற நாள் முதல் புலிகள் தாக்குதல்களை ஆரம்பித் துவிட்டார்கள் என்றார்.

இதேவேளை சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பிகுறுக் கிட்டு புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை யோ சனை தொடர்பாக என்ன கூறுகின்றீர்கள் எனக் கேட்ட தற்குப் பதிலளித்த அமைச்சர் அதுபற்றி நான் எதுவும் கூறமுடியாது. அது ஐ.தே.கவின் சதிவேலை என்கிறார்.

மேலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கடந்த 30ஆண்டு காலமாக பார்த்து வருகின்றோம். தமிழ் மக்களின் போராட்டமாக அதனை நோக்கமுடியாது. புலிகள் யாரைக் கொல்லுகின்றார்கள் என்பதல்ல. யாரைக் கொலை செய்யாமல் விடுகின்றார்கள் என்பது தான் முக்கியம். இதுவரை 80அரசியல் தலைவர்களை புலிகள் கொலை செய்துள்ளனர். அதிகளவாக தமிழ் தலைவர் களைத்தான் கொலை செய்திருக்கின்றார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் என்று பல்வேறு பட்ட தரப்பினர் புலிகளினால் கொலை செய் யப்பட்டுள்ளனர். பெண்கள், குழந்தைகள் என நாங்கள் கூறிக் கொண்டே போகலாம்.

தங்களை ஏக பிரதிநிதிகள் எனப் புலிகள் கூறுகிறார் கள். இதுதான் இங்கே பிரச்சினை . ஆனால் ஒன்று தமிழர் கள் எல்லோரும் புலிகள் அல்ல.நாங்கள் அதனை அவதா னமாக நோக்கவேண்டும். புலிகள் விடுதலைப் போராளி களா? பயங்கரவாதிகளா? இதனைத் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். புலிகள் மாற்றுக்கருத்து அல்லது மாற்றுத்தீர்வு ஒன்று ஏற்படுவதை தடுக்கும் நோக்கிலே யே தாக்குதல்களை நடத்துகிறார்களா? அல்லது மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களை தங்க ளுக்குள் இழுத்துச் செல்வதற்காகவா தாக்குதல் நடத்துகிறார்கள்? என்பது தெரியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரபாகர னோடு பேசமுடியுமா? ஆனால் எமது ஜனாதிபதியோடு எந்த நேரமும் எவரும்பேசலாம். மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் யாரையும் கொலை செய்தது கிடையாது. தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது. அரசியல் உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது. அதனைப் பயன்படுத்தியே புலிகள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். புலிகளின் போராட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் உரிமையும் உள்ளடங்கியிருக்கின்றது. ஆனால் புலிகள் அதனைப் பயங்கரவாதமாக்கிவிட்டனர். இந்த நாட்டை பிரிப்பதற்கு சர்வதேச நாடுகள் உடன்படாது என்றார்.(த)

# சமாதானப் பேச்சு நடைபெற வேண்டுமெனில் சாதக சூழலை உருவாக்க வேண்டும் அரசு

## சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பி



(கொழும்பு)

"இலங்கை அரசு தமிழர்கள் தொடர் பான எந்த விடயத் திலும் நீதியான முறையில் செயற் படுவதில்லை. இதன் காரணமாக அரசு மீது நம்பிக்கை இழந்துள்ள புலிகள் அரசுடன் பேசிப் பயனில்லை என்று நினைக்கின்றனர். அரசுடன் புலிகள் அமைதிப் பேச்சில் ஈடுபடுவது சாத்தி யமற்ற ஒன்றாகிவிட்டது. உண்மையில் அமை திப்பேச்சு இடம்பெற வேண்டும் என்றால் அரசு, புலிகளுக்கு நம்பிக்கை வரும் விதத்தில் செயற்படவேண் டும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்று முன் தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இம்மாதம் 12ஆம் திகதி யாழ்.வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் கடற்படையினரின் 'டோரா' படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான விவாதம் சபையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் எப்போதும் யுத்தத்தை விரும்பியதில்லை. அஹிம்சை வழி மூலமே பிரச்சினைக்குத் தீர்வு பெறப் பட வேண்டும் எனக்கூறி அரசு மீது நம்பிக்கை கொண்டு செயற்பட்டோம்.

ஆனால் அரசு அந்த நம்பிக்கைகளைச் சிதைத்து விட்டது. இதனால் வேறுவழிகள் இன்றே நமது ஆயுதம் ஏந்திப் போராட வேண்டி ஏற்பட்டது. இப்போதும் கூட அரசு மீண்டும் மீண்டும் எமது பிரச்சினைகளை அதிகரிக்கவே செய்கின்றது. இதன்காரணமாகவே தீர்க்கமுடியாத அளவுக்குப் பிரச்சினைகள் வளர்ந்துவிட்டன.

எந்தவிடயத்திலும் அரசு நேர்மையாகச் செயற்பட வில்லை. பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக கூறிக் கொண்டு பிரச்சினையை மேலும் வளர்த்துவிட்டன.

ஜெனீவாப் பேச்சின் முடிவில் எட்டப்பட்ட தீர்மானங் களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படியென்றால் எதற்கு பேச்சை நடத்தினீர்கள்? இந்தப் பேச்சில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்தாமல் மீண்டும் புலி களைப் பேச்சுக்கு அழைக்கின்றீர்கள். உங்களை நம்பி எப்படிப் பேச்சுக்கு வருவது? அப்ப டிப் பேசினால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.

வடக்கு-கிழக்கில் தமிழர்களைக் கொலை செய்கிறீர்கள். இதைத் தடுத்து நிறுத்துமாறும் சம்பந்தப்பட்டவர் களைக் கைதுசெய்யுமாறும் நாம் அரசைக் கேட்டுக் கொண்டோம். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறு எல்லா விடயத்திலும் நம்பிக்கை வரும் விதத் தில் அரசு செயற்படவில்லை. நிலைமை மேலும் மேலும் மோசமாகத் தான் போகிறது. இந்த நிலையில் பேச வாருங் கள் என்று புலிகளைக் கூப்பிட்டால் அவர்கள் எப்படி வருவர்? அடுத்த கட்ட ஜெனீவாப் பேச்சு நடக்க வேண்டும் என்றால் தமிழர்கள் மீதான படுகொலைகளை நிறுத்தி பேச்சிற்கான ஒரு சாதக சூழலை அரசு உடனடியாக உருவாக்க வேண்டும். இல்லையேல் பேச்சு நடக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## அமெரிக்கத் தூதுவராக புதியவர் நியமனம்

இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான புதிய அமெரிக்கத் தூதராக றொபேட் ஓ.பிளேக் நியமிக்கப்பட்டி ருக்கிறார்.

இவர் முன்னர் இந்தியாவுக்கான பிரதித் தூதராகவும் எகிப்து, நைஜீரியா ஆகிய நாடுகளுக்கான பொருளியல் அதிகாரியாகவும், ருனிசியா நாட்டின் அரசியல் ஆலோ சகராகவும் கடமையாற்றியுள்ளார். (த)

# வடக்குப் பகுதிக்கு வரும் வாகனங்களுக்கு ஓமந்தையில் படையினர் கட்டுப்பாடு ?

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து வடக்கே யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய பகுதிகளுக்கு வரும் வாகனங்களை படையினர் கடந்த சில தினங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ஓமந்தை சோதனைச் சாவடியூடாக அனும திக்கின்றனர் என்றுதெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் உட்பட சகலவிதமான அத்தியாவசியப் பொருட்களும் ஏ9 வீதியூடாக வாகனங் களிலேயே கொண்டு செல்லப்படுகின்றன.

பல்வேறு வகையான பொருள்களை ஏற்றிக்கொண்டு நாளாந்தம் பலநூற்றுக்கணக்கான வாகனங்கள் ஓமந்தை சோதனைச் சாவடியைக் கடந்து வடக்கே செல் வது வழமை.

ஆனால், கடந்த சில நாட்களாகப் படையினர் தினமும் முப்பதுக்கும் குறைவான வாகனங்களையே உட் செல்ல அனுமதிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படு கிறது.இதனால், வடக்கே கொண்டு செல்வதற்கென பல் வேறு வகையான பொருட்களை ஏற்றியபடி ஏராளமான வாகனங்கள் ஓமந்தையில் வரிசையாகத் தரித்து நிற்கின்றன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையை விதிக்கும் படையினரின் எதேச்சதிகார முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே இது இருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (த)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 52



### சோதனை மேல் சோதனை

தெம்பி குத்துச் சண்டை கற்றுத் தந்த தனது ஆசிரியனாக விளையாடிய காட்சிகள்...அப்பாவின் பெரிய சட்டையைத் தொளதொளவென்று போட்டுக் கொண்டு அவன் ஆடிய ஆட்டம்... இவை நெஞ்சைத் துளைத்தன.

மீண்டும் அனுமதி கேட்டார்.வழக்கம் போல மறுக்கப்பட்டது. இதையடுத்து சில மாதங்களுக்குப் பின்னர் வழக்கறிஞர் பிராம்பிசர் மண்டேலாவைப் பார்க்க தீவுச் சிறைக்கு வந்தார். பிராம்பிசர் வெள்ளையர் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர். அவர் ஆரஞ்சு ப்ரீஸ்டேட் என்ற நாட்டுப் பிரதமரின் முதல் மகன். அவர் தென்னாபிரிக்காவின் அடுத்த பிரதமராகக் கூடும் எனப் பத்திரிகைகள் எழுதிக்கொண்டிருந்தபோது கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து விட்டதாக அறிவித்து பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறையில் பாதி, சிறைப்பட்டவர்களுக்காக வாதிட்டது மீதி என வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தவர். மண்டேலாவின் ஞான குருக்களில் ஒருவர்இவர். பிராம்பிசருடன், இன்னொரு நண்பரும் வந்திருந்தார். அவர்களை வரவேற்ற மண்டேலா. பிராம் பிசரின் துணைவியார் நலம்பற்றி விசாரித்தார். அவரது மனைவி அன்பும் , அறிவும், ஆற்றலும் மிக்க பெண்மணி. அவர்கள் வீட்டிற்குள் மட்டும்தான் கருப்பர்கள் மனிதர்களாக நுழைய முடியும். வந்தோர்க்கு பிராம் பிசரின் மனைவியே சிற்றுண்டி தயாரித்துப் பரிமாறுவார். ஒரு வெள்ளை மாது நிறம் பாராது பரிவு காட்டியது அபூர்வக் காட்சி.

எனவே, அந்த அன்பு சகோதரியைப் பற்றி மண்டேலா கேட்டவுடன், பிராம்பிசர் எழுந்து சுவர்ப் பக்கமாகப் போய்விட்டார். மண்டேலாவுக்குக் குழப்பம். குடும்பத்தில் சர்ச்சையா? அன்பு மிக்க தம்பதிகள் ஆயிற்றே. எனவே சண்டை சச்சரவு இருக்காது. பிறகு என்ன...குழம்பிப் போய் உடனிருந்த நண்பரைக் கேட்டார். அவர் மண்டேலாவை அழைத்து காதுக்குள் இரகசியமாகப் பேசினார்... இருவாரங்களுக்கு முன்னர் பிராம்பிசர், மனைவியுடன் ஒரு கூட்டத்திற்குப் போய் விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். ஒரு வளைவில் கார் சறுக்கி, அருகிலிருந்த குளத்திற்குள் பாய்ந்து விட்டது. பிராம்பிசர் தப்பிவிட்டார். தண்ணீரில் மூச்சுத்திணறி அவரது மனைவி இறந்து போனார். கவலை தாங்காது பிராம்பிசர். இருவாரங்களாக வீட்டிலேயே இருந்தார். உங்களைப் பார்க்கத் தான் முதன் முதலாக வெளியில் வந்திருக்கிறார்... அதுதான் பேசமுடியாமல் , நகர்ந்துவிட்டார் என்றார். குண்டுக்கும், அடக்குமுறைக்கும் அஞ்சாத மனிதர், மனைவியைப் பிரிந்த துயரில் ஆழ்ந்து இருப்பதை,அதே போன்ற பல துக்கங்களைச் சந்தித்த மண்டேலாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

அன்று விடைபெற்றுச் சென்ற வழக்கறிஞர் பிராம்பிசரிடமிருந்து எந்த விதத் தகவலும் வரவே இல்லை. ஓராண்டுக்குப்பின், பிராம்பிசருக்கு இரண்டாண்டு தண்டனை கொடுக்கப்பட்டு, ஏதோ ஒரு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. அவர் சிறையிலிருக்கும் போது அவரைச் சோதித்த டாக்டர்கள் அவரைப் புற்றுநோய் தாக்கியிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

இந்தச் செய்தி பரவியவுடன், அவரை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கை பல நாடுகளிலிருந்தும், ஆபிரிக்கா முழுவதிலும் எழுந்தது.

உலக நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து அவரது அண்ணன் வீட்டில், வீட்டுக் காவலில் இருந்து கொண்டு,சிகிச்சை செய்து கொள்ள அரசு வெளியில் அனுப்பியது. ஆறு மாதங் கழித்து அவர் காலமாகிவிட்ட துக்கச் செய்தி சிறைக்கும் எட்டியது. சிறைக் கைதிகள் விதிகளை மீறி ஒரு இடத்தில் கூடி அஞ்சலி செலுத்தினர். சிறையதிகாரிகளும் துக்கத்தில் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரிவு மண்டேலாவைப் பெரிதும் வாட்டியது.

இதையொட்டியே, இன்னொரு செய்தியும் வந்தது. பிரதமராக இருந்த வீர்வார்டை , அவரது பணியாட்களில் ஒருவரே கத்தியால் குத்திக் கொன்றுவிட்டார். வீர்வார்டு ஒடுக்குமுறைக்குப் பெயர் பெற்றவர் என்றாலும், கொலை வழியில் பழி தீர்ப்பது சரியல்ல என மண்டேலா கூறினார். சிறைக்குள் இத்தகைய இடிச் செய்திகளையும் தாங்கிக் கொண்டு தான்வாழவேண்டி இருந்தது.

### தப்பி ஓட முயற்சி

சிறையிலிருந்து விடுதலை எப்போது வருமோ தெரியவில்லை. சிறைக்குள் கட்டுண்டு முடங்கிக் கிடந்தால்,தானாகச் சுதந்திரம் வந்துவிடுமா? எனவே, தப்பியோட வழிதேடுவது நல்லது எனப் போராளிகள் பேசிக்கொண்டனர். இதற்கு ஒரு முக்கிய அவசரக் காரணமும் வந்தது. பக்கத்து நாடுகளில் விடுதலைக்காகப் போராடிய வீரர்களும் கைதாகி ரோபன் தீவுச் சிறைக்குக் கொண்டு வரப் பட்டனர். சீனா, பாலஸ்தீனம்,எதியோப்பியா இன்னும் பல நாடுகளில் பயிற்சி பெற்ற உம்காண்டோ வீரர்கள், தாயகம் திரும்பிய பிறகு கைதாகி இங்கே வந்து சேர்ந்தனர். இந்த எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருந்தது. வெளியிலிருந்து சிறைக்குள் வந்தோர் சில கவலை தரும் செய்திகளையும் கொண்டுவந்தனர்.இராணுவப் பயிற்சி முகாம்களில் பழைய கட்டுப்பாடும், விறுவிறுப்பும் தளர்ந்து வருகிறது என்றும் , சில விரும்பத்தகாத சக்திகள் நுழைந்துவிட்டன என்றும், நிதியைக் கையாள்வதில் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதையும், தக்க தலைமை இன்றி அது தடுமாறிக் கொண்டிருப்பதாகவும் வந்தவர்கள் சொன்னார்கள்.

எனவே,இயக்கத்தைக் காக்க களம்நோக்கி ஓடுவது அவசியம் என மண்டேலாவும், நண்பர்களும் கருதினர். இந்த நேரத்தில் ஒரு கைதி நெருங்கிப் பழகி, கடற்கரைக்குப் போய்விட்டால், அங்கிருந்து ஒரு படகில் கேப்டவுனுக்கு ஓடிவிட ஏற்பாடு செய்வதாகச் சொன்னான். அவன் பேசிய முறை, நடந்துகொண்ட விதம்,மண்டேலாவுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. எனவே,அப்படி ஒரு ஆசையே இல்லை என்று அடித்துக் கூறிவிட்டார். அவன் அரசின் ஒற்றன் என்பதும், அவன் சொன்னபடி கடற்கரை வரை மண்டேலா போனால், அங்கே சுட்டுக் கொன்று கடலில் போட்டுவிடத் திட்டமிட்டிருந்தது வெளிச்சமாயிற்று. எதிரி விரித்த வலையில் விழாது தப்பியது ஒரு உயிர்.

ஆனால்,இதையடுத்து இவர்களே திட்டமிடத் தொடங்கினர். சிறைக்குள் வந்த கைதிகளில் பலர் தொழில்நுட்பம் தெரிந்த பொறியியற் வல்லுநர்கள் .அவர்களில் ஒருவர் மிகத் திறமையோடு எல்லாக் கதவுகளையும் திறக்கக் கூடிய சாவிகளைச் செய்துவிட்டார். ஓசையே இல்லாமல் திறந்தும் காட்டினார். ஆக,முதல்படி வெற்றி.

அதற்கடுத்து , கடலில் கேப் நகரம் போக மரக்கட்டைப் படகு, அதையும் செய்து முடிக்க வழி காண்பிக்கப்பட்டது. அங்கிருந்து ஜோகன்ஸ்பர்கிற்கு தப்பியோடுவது என யோசனை. இதைச் செய்து முடிக்கும் திறமைசாலிகள் இருந்தனர். ஆனால்,இதில் ஒரு சிறு தவறு நிகழ்ந்தாலும், அனைவரும் கொல்லப்படுவது உறுதி. மேலும்,இதை கண், காது,மூக்கு வைத்து , கதை கட்டி, சுதந்திர இயக்கத்தையே கருஞ்சாயம் பூசி வட அரசுக்கு ஆயுதமாகவும் பயன்படலாம்.எனவே,ஆழ்ந்த யோசனைக்குப் பின்,இதையும் தள்ளிப்போட மண்டேலா யோசனை கூறினார். (தொடரும்)

# இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கும் கோதுமைமாவுக்கும் விலை அதிகரிக்கப் பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகம சபையில் தெரிவித்தார்.

சுங்கவரி திணைக்கள திருத்தச் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இறக்குமதி செய்யப்படும் அரிசி ஒரு கிலோ 20ரூபாவினாலும் கோதுமைமா 12.50சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்களில்பலர் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கும் கோதுமைமாவுக்கும் பழக்கப்பட்டுள்ளனர்.

இதனால் உள்ளூர்நெல் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே உள்ளூர் அரிசியை மக்கள் கூடுதலாக பயன்படுத்துவதற்குரிய வகையில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கும் கோதுமை மாவுக்கும்



விலையை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது. கடந்த ஜனவரி 31 ஆம் திகதி முதல் இந்த விலை அதிகரிப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கான நிலுவை வரி இறக்குமதிநிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும் என்று கூறினார். (த)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 15 கிலோ ஹெரோயின் சிக்கியது!

## இராமேஸ்வரம் பொலிஸாரால் இருவர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 15கிலோ ஹெரோயினை தமிழக போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைப்பற்றினர். அதனைக் கடத்தவிருந்த இருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையில் போர்ப் பதற்றம் நிலவிவருவதால் கூடுதலான அளவில் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வந்தவண்ணமுள்ளனர். அகதிகளோடு அகதிகளாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் தமிழகத்தினுள் ஊடுருவும் அபாயம் இருப்பதால் கடந்த சில தினங்களாக இராமேஸ்வரத்தில் பொலிஸார்சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர்.

இந்நிலையில்நேற்று முன்தினம் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்ட தமிழகப் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 15 கிலோ ஹெரோயின் போதைப்பொருளைக் கைப்பற்றினர்.

இந்தப் போதைப் பொருளை வைத்திருந்த இலங்கையைச் சேர்ந்த அஹம்மட் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த இருளாண்டி ஆகிய இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (த)

# ஐ.நா.அமைதி கல்வி விருது இலங்கை நீதிபதிக்கு !

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்தின் துணைத் தலைவராக உள்ள இலங்கை நீதிபதிக்கு அமைதிக் கல்விக்காக ஐ.நாவின் 2006க்கான கல்வி அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

விருது பெறும் இலங்கை நீதிபதி கிறிஸ்டோபர் கிரஹோரி வீரமந்திரிக்கு ரூ.18இலட்சம் அளிக்கப்படுகிறது.

இந்த விருது வாழ்நாள் முழுதும் அமைதி முயற்சிகளுக்கான உறுதியான மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுவதாக யுனெஸ்கோவின் தலைமை இயக்குநர் கோன்சிரோ மட்சுரா தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வீரமந்திரி சர்வதேச அமைதிக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவராக இருந்து வரும் நீதிபதி கிறிஸ்டோபரின் பங்களிப்பு அமைதிக்கான கல்வி, மனித உரிமை, பன்முக கலாசார கல்வி, சமூக ஒருங்கிணைப்பு, சுற் றுச் சூழல் பாதுகாப்பு , சர்வதேச சட்டம் போன்றவற்றின் மேம்பாட்டிற்கு இன்றியமையாததாக அமைந்துள்ளதாக யுனெஸ்கோ தெரிவித்துள் ளது . (த)

# சவப்பெட்டி வாங்க வந்தவர் படையினரால் கைது!

இறந்த தந்தைக்கு சவப்பெட்டி வாங்கச் சென்ற மகன் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மடுத்தீன் தாவீது கொன்சன்(வயது -27) இரணைதீவு பூநகரி என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் காலை 7.00 மணிக்கு முழங்காவிலில் இருந்து மன்னாருக்குச் சென்ற கொன்சன் தனது தந்தையின் உடலை அடக்கம் செய்வதற்காக சவப்பெட்டியை வாங்கிக் கொண்டு 11.00 மணியளவில் உயிலங்குளம் இராணுவ சோதனைச்சாவடியூடாக முழங்காவிலுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் அவரிடம் 7.62 ரக ரவை ஒன்று இருந்ததாகக் கூறி இராணுவத்தினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கொன்சன் நேற்று முன்தினம் 2.30 மணியளவில் உயிலங்குளம் பொலிஸாரினால் மன்னார்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (த)

## புகைப்பொருள் எதிர்ப்புத் தினம்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புத் தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன் கிழமை காலை 10மணிக்கு சித்தன் கேணி சிவன்கோவில் தெற்கு வீதியிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் சி. இராசலிங்கம் ஜே.பி. தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக மா[illegible]ப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சிவகணேஸ், சங்கானை பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஜ் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

வ.பி.ந.சம்மேளனம் ஜே.பி. நன்றியுரை நவில்வார். (கு)

# மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை விடுவித்தது நேபாள அரசு!

## சமாதானப் பேச்சுக்கும் அழைப்பு

சிறையில் அடைக்கப்பட்டிருந்த 467 மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை நேற்று முன்தினம் நேபாள அரசு விடுதலை செய்தது. அத்துடன் சமாதான பேச்சுவார்த்தைக்கும் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

நேபாளத்தில் மன்னராட்சியை கவிழ்த்து விட்டு பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தலைமையிலான ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ளது. புதிய அரசு ஆட்சியமைத்ததுமே நீண்ட காலமாக தனி நாடு கேட்டு போராடி வந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை சமாதானப்படுத்தும் விதமாக அவர்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் மாவோயிஸ்டுகள் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இதர மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை விடுதலை செய்வதாகவும் நேபாள அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது.

நேபாள அரசின் இந்த அறிவிப்பைக் கேட்டு மாவோயிஸ்ட் தீவிரவாதிகளும் அவர்களது தலைவர் பிரச்சந்தா தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு வந்தனர். இதையடுத்து நேபாள அரசு நேற்று முன்தினம் சுமார் 467 மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை சிறையிலிருந்து விடுதலை செய்திருப்பதாக அறிவித்துள்ளது.


இதுகுறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த நேபாள உள்துறை அமைச்சர் கிருஷ்ணா பிரசாத் சித்தெளலா கூறுகையில்,

நாட்டின் அரசியல் அமைப்பு சாசனத்தை மறுபடியும் திருத்தியமைப்பது தொடர்பான புதிய அமைப்புக்கு தேர்தல் நடத்துவது தொடர்பாக மாவோயிஸ்டுகளுடன் விரைவில் நான் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறேன். இதற்காக 3 உறுப்பினர்கள் அடங்கிய குழு இறுதிசெய்யப்பட்டு விட்டது. இந்த 3 பேர் அடங்கிய குழுவுக்கு நான் தலைமை தாங்கவிருக்கிறேன் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே கடந்த செவ்வாய்க்கிழமையன்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மாவோயிஸ்ட் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர், நேபாள அரசு சுமார் 1300 க்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை விடுதலை செய்தால்தான் சமாதான பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு வருவதாக தெரிவித்திருந்தார். இதற்குப் பதில் அளிக்கும் விதமாக நேற்று முன்தினம் அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு பேட்டியளித்த உள்துறை அமைச்சர் சித்தெளலா, நாங்கள் ஏற்கனவே அனைத்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகளையும் விடுதலை செய்யவிருப்பதாக உத்தரவிட்டிருக்கிறோம். இதுவரை 467 மாவோயிஸ்டுகளை விடுதலை செய்திருக்கிறோம். அதேசமயம் அரசு பக்கமிருந்து மாவோயிஸ்டுகளை சமாதான பேச்சுவார்த்தைக்கு வருமாறும் அழைப்பு விடுத்திருக்கிறோம் என்று தெரிவித்தார். (கு)



அமெரிக்காவில் உள்ள மில்வாக் பகுதியில் உள்ள கட்டடத்தில் மின்னல் தாக்கிய போது எடுக்கப்பட்ட படம்.



ஜப்பான் மற்றும் சீன பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு டோக்கியோவில் இராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. அருகில் ஜப்பான் இராணுவ அமைச்சர் பியூகுசிரோ நுகாகா.

# பறவைக்காய்ச்சல் நோயைக் கண்டுபிடிக்க ஆய்வுகூடம் அமைத்துள்ளது அமெரிக்கா

பறவைக்காய்ச்சல் நோய் பரவினால் அதைக் கண்டுபிடிக்கவும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் அமெரிக்கா தயாராகி விட்டது. இதற்காக விசேஷமாக ஒரு ஆய்வுகூடம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல் நோய் பல நாடுகளில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி வருகிறது. பறவைக்காய்ச்சல் நோய்க்கு காரணமான எச் 5 என் 1 என்ற வைரஸ் நோய் மிக கொடூரமான ஒன்றாக கருதப்படுகிறது. கடந்த 2003ஆம் ஆண்டு முதல் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் இவ்வகை வைரஸ் கிருமிகள் பரவி பறவைக் காய்ச்சல் நோய் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் 124 பேர் இறந்துள்ளனர்.

தற்போது இந்நோய் பறவைகளில் இருந்து மனிதர்களுக்கு பரவி வருகிறது. மனிதர்களில் இருந்து மற்றொரு மனிதருக்கு பரவுவது மிகவும் அபூர்வமாக கருதப்படுகிறது. இதுபோல் பரவினால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவர் என விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர். உலகளவில் இந்தோனேஷியாவில் மட்டுமே மனிதரிலிருந்து மனிதருக்கு பறவைக்காய்ச்சல் நோய் பரவி இருப்பதை உலக சுகாதார கழகம் கண்டுபிடித்துள்ளது.

இந்தோனேஷியா நாட்டில் உள்ள சுமத்ராவின் வடக்கு பகுதியில் கூபூ செம்பலாங் என்ற கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் கடந்த மாதம் இறந்தனர். இதற்கு பறவைக் காய்ச்சல் நோய் அவர்களிடையே பரவியதே காரணம் என்பது தெரியவந்துள்ளது.

உலகளவில் பறவைக்காய்ச்சல் நோய் பீதி இருப்பதால் அதை எதிர்கொள்ள அமெரிக்காவும் தயாராகி வருகிறது. இதற்காக ஐவோவா மாகாணத்தில் ஏம்ஸ் நகரத்தில் விசேஷ ஆய்வுகூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகூடம் அமெரிக்க விவசாயத் துறை கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. இங்கு விசேஷ பயிற்சி பெற்ற நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பறவைக்காய்ச்சல் நோய் இதுவரை பரவவில்லை. அந்நோய் பரவியுள்ளது என்பதை இறுதி செய்து அறிவிக்கும் மையமாக இந்த ஆய்வுகூடம் நிறுவப்பட்டுள்ளது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (கு)

WORLD NEWS உலக தரிசனம்

# சோமாலியில் கலவரம் 38 பேர் இதுவரை பலி

சோமாலி தலைநகர் சோமாலியாவில் நடந்த கலவரத்தில் 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சோமாலியின் முக்கிய தலைநகரில் நேற்று முன்தினம் இராணுவத்தினரிடையே கலவரம் ஏற்பட்டது. சோமாலியின் மோகாடிஷ் பகுதியில் மட்டும் 30 பேர் பலியானதாக கூறப்படுகிறது.

அலி முகமது சியாத் என்ற இஸ்லாமிய இராணுவ தரப்பிலிருந்து 8 பேர் இறந்துவிட்டதாக அதன் தலைவர் தெரிவித்தார். அங்குள்ள மெடினா மருத்துவ மனையில் காயமடைந்த 60 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றொரு மருத்துவ மனையான கேஸ்னே மருத்துவமனையில் காயமடைந்த 30 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மே 4ஆம் திகதி முதல் இஸ்லாமிய தீவிரவாதிகளிடம் சண்டை நிறுத்தம் அமுலில் இருந்தாலும் அதையும் மீறி நேற்று முன்தினம் இக்கலவரம் நடந்துள்ளது. கலவரம் முதலில் மோகாடிசின் வடக்கு பகுதிகளிலிருந்து தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

கடந்த 8 நாட்களாக நடந்த சண்டையில் இதுவரை 140 பேர் பலியாகியுள்ளனர். இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் மதச் சார்பற்ற கூட்டணிக்கும் இடையே இந்த மாதத்தின் தொடக்கத்திலிருந்தே மோதல் நடந்து வருகிறது. (கு)

# 'நான் இயேசுவின் மறுபிறவி' என்கிறார் இந்துப் பெண்

(டர்பன்)

தென்னாபிரிக்காவில் உள்ள டர்பன் நகரைச் சேர்ந்த பெண் கேதரைன் ஜவாரிலால். 35 வயதான இவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். குற்றவியல் துறையில் பட்டம் பெற்றவர். இவர் இயேசுவின் மறுபிறவிதான் நான் என்று கூறிக் கொள்கிறார்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது அவர் உடலில் ஏற்பட்ட காயங்களின் தழும்புகள் என் உடலின் வயிறு, உள்ளங்கை, பாதம் ஆகிய இடங்களில் இருக்கின்றன. நோயாளிகளை என்னால் குணப்படுத்த முடியும் என்று கேதரைன் கூறி இருக்கிறார்.

இயேசு பேசிய ஹிப்ரு மொழியின் எழுத்துக்களும் பைபிள் புனித நூலில் இடம் பெற்ற மதச் சின்னங்களும் என் வீட்டுச் சுவற்றில் இடம்பெற்று உள்ளன என்றும் அவர் கூறி இருக்கிறார்.

பத்திரிகை நிருபர்கள் அவர் வீட்டுக்குச் சென்றபோது தேவதைகளின் தோற்றங்களைக் கொண்ட வரைபடங்கள் மற்றும் சிலுவைக்குறி ஆகியவை அவர் வீட்டுச் சுவற்றில் இருப்பதை அவர் காட்டினார்.

வீட்டுச் சுவற்றில் ஹிப்ரு மொழியில் எழுதப்பட்ட வாசகத்தையும் அவர் நிருபர்களுக்கு சுட்டிக்காட்டினார்.

2004ஆம் ஆண்டு எனது 33ஆவது பிறந்த நாளில் வீங்கிய கைகளுடன் நான் கண் விழித்தேன். என் கையில் கேதரைன் கடவுள் உனக்கு வாழ்க்கை கொடுத்து இருக்கிறார் என்று எழுதப்பட்டு இருந்தது. இதைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன். அதன் பிறகுதான் நான் யார் என்பது எனக்குத் தெரியவந்தது.

இயேசுவின் மறுபிறவி என நான் கூறுகையில் மக்கள் ஏற்கவில்லை. சிலர் என்னை சாத்தான் என்றும் போலி என்றும் சொல்கிறார்கள். நான் பெண் என்பதாலும் இந்து மதத்தைச் சேர்ந்தவள் என்பதாலும் என்னை அப்படிச் சொல்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து உலகம் முழுவதற்கும் பொதுவானவர். அவருக்கு இனம், நிறம் என்ற வேறுபாடு கிடையாது. நான் இப்போது கடவுளின் குழந்தை.

எனக்கு கொலைமிரட்டல்கள் வருகின்றன. என் குடும்பத்தினரை ஊரை விட்டு வெளியேறும்படி மிரட்டுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, டர்பனில் உள்ள மதத் தலைவர்கள் கேதரனைக் கண்டித்துள்ளனர். அவரிடம் எச்சரிக்கையாக இருக்கும்படியும் மக்களைக் கேட்டுள்ளனர்.

பைபிளில் மறு அவதாரம் பற்றி எதுவும் கூறப்படவில்லை. இயேசு நிச்சயம் ஒரு பெண்ணாக பிறவியெடுக்க மாட்டார் என்று பிஷப் ஞானி பிராங் கூறினார். (கு)

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னுக்கு அருகிலுள்ள லிஸ்மோர் என்ற இடத்தில் உள்ள லெவல் கிராசிங்கில் சரக்கு பெட்டிகளை ஏற்றி வந்த ரயில் ஒன்று தடம் புரண்டது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். 44 பெட்டிகள் தடம் புரண்டன.



> அடைந்த சுதந்திரத்தை மற்றவர்களுக்கு அளிக்க மறுப்பவன் அயோக்கியன் மட்டுமல்லன்; களங்கம் படைத்தவனும் கூட.
>
> -இங்கர்சால்

வலம்புரி

## ஜனாதிபதி மகிந்தவின் கபடத்தனமான சிந்தனை

விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தால் அவர்கள் நேரடிப் பேச்சு வார்த்தைக்கு வருவார்கள்.இவ்வாறு கூறியிருப்பவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதியாக பதவியேற்று சில மாதங்களில் அவர் கண்டறிந்த இந்த அதிசயமான செய்தியைக் கேட்கும்போது தலையில் கை வைத்து அழவேண்டும் போல் இருக்கிறது.

ஒரு நாட்டின் ஜனாதிபதி, அதிலும் சமாதானத்தை ஏற்படுத்துவேன் எனக்கூறிய ஒருவர் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடை செய்யவேண்டும் எனக்கூறுவது அவரின் கபடத்தனத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளைத் தடைசெய்யுமாக இருந்தால் நேரடிப் பேச்சுவார்த்தை ஒருபோதும் சாத்தியப்படாது என்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்கு தெரிந்த விடயம்.

இருப்பினும், விடுதலைப்புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் தடை விதித்து விட வேண்டும் என்பதே ஜனாதிபதி மகிந்தவின் இலக்கு.

பரவாயில்லை, பேரினவாதக்குட்டையில் நீண்ட காலம் ஊறிய ஒருவரிடம் நியாயத்தை எதிர்பார்ப்பது முடியாத காரியமே.

ஆனால், உலக நாடுகளுக்கு என்ன மதியென்பதே தமிழ் மக்களின் தற்போதைய கேள்வி.

சமாதான அனுசரணைப் பணியில் நோர்வே ஈடுபட்டுள்ள வேளையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்யுமாக இருந்தால் பேச்சுவார்த்தையை குழப்பிவிட்ட பழிக்கு அந்த ஒன்றியம் ஆளாவது உறுதி.

அமெரிக்கா, பிரிட்டன் ,இந்தியா போன்ற நாடுகள் விடுதலைப்புலிகளை தடைசெய்ததன் மூலம் சாதித்தது என்ன?என்பது பற்றி ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விடுதலைப் புலிகளை இந்தியா தடை விதித்ததன் காரணமாக சமாதான முயற்சிகளில் இருந்து இந்தியா விலகவேண்டியதாயிற்று.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை இந்தியாவிலேயே இடம்பெற்றிருக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை இந்தியாவில் நடத்துவதை விடுதலைப்புலிகள் விரும்பியிருந்தனர். இந்தியாவில் பேச்சை நடத்துவது, சமாதானத் தீர்வை எட்டுவதற்கு வழிவகுக்கும் என்பதோடு அண்டை நாடான இந்தியாவை கௌரவப்படுத்துவதாகவும் இருந்திருக்கும்.

எனினும் இந்தியாவின் சமயோசிதமற்ற முடிபு அந்த நாட்டின் வல்லாண்மைக்கே ஆபத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது.

அதாவது, அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இந்தியாவில் இடம்பெற்றிருந்திருக்குமாயின் அமெரிக்கா போன்ற நாட்டின் தலையீட்டை தவிர்த்திருக்க முடியும்.

என்ன செய்வது? இலங்கை அரசு மற்றும் அமெரிக்கா,பிரிட்டன் போன்ற நாடுகளின் இராஜ தந்திர வலைக்குள் இந்தியா சிக்குண்டதன் விளைவாக விடுதலைப்புலிகளை தடை செய்ததும் அதனூடாக இலங்கைப் பிரச்சினைக்குள் ஏனைய நாடுகள் மூக்கை நுழைத்துக் கொண்டமையும் நடந்து முடிந்த காரியம்.

இது போன்ற ஒரு துரதிஷ்டமான ஒரு முடிபை ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலம் அரங்கேற்றுவதில் ஜனாதிபதி மகிந்தவும் அமெரிக்காவும் தீவிரமாக ஈடுபட்டிருப்பது அவர்களின் கபடத்தனத்தின் அம்பலமாகும்.

## யுத்தம் வெடிக்கும்; தமிழீழம் பிறக்கும் பாராளுமன்றத்தில் கஜேந்திரன் எம்.பி.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் மீது அரச படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனமான வெறியாட்டத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் நிச்சயம் யுத்தம் வெடிக்கும் அவ்வாறு யுத்தம் வெடித்தால் தமிழீழம் தானாகவே உருவாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார். வெற்றிலைக் கேணி 'டோரா' படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே கஜேந்திரன் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இம்மாதம் 12ஆம் திகதி யாழ்.வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படையினரின் 'டோரா' படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக இந்த விவாதம் இப்போது இந்தச் சபையில் நடத்தப்படுகிறது.

உண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகள் படையினரின் படகுகளைத் தேடிச்சென்று தாக்குதல் நடத்தவில்லை. புலிகள் கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் அப்பயிற்சி நடவடிக்கைக்கு இடையூறு விளைவிப்பதற்காக கடற்படையினர் புலிகளின் படகுகள் மீது தாக்குதல் தொடுத்தனர். புலிகள் பதில் தாக்குதல் தொடுத்தனர். இதுதான் உண்மையில் நடந்தது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதிலிருந்து வடக்கு கிழக்கில் தினமும் மரண ஓலங்களே கேட்கின்றன. படையினர் தமிழ் மக்களின் பாதையில் முள்வேலியாக நிற்கின்றார்கள். அதில் சிக்கிய சேலையாக தமிழர்களின் நிலை மாற்றியுள்ளது. இந்த நிலைமையை இல்லாதொழிக்கும் நோக்கில்தான் புலிகள் செயற்படுகின்றனர். தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காகவே புலிகள் பாடுபடுகின்றனர்.

தமிழ் மக்கள் வடக்கு-கிழக்கில் துன்பம் அனுபவிக்கின்ற வேளை, தெற்கில் சிங்களவர்கள் இன்பம் அனுபவிக்கவேண்டும் என அரசு எதிர்பார்க்கின்றது. அரசு மேற்கொண்டுவரும் அரச பயங்கரவாதத்துக்கு தூபம் போடுவர்களாகவே ஜாதிகஹெல உறுமயத் தேரர்கள் இந்தச் சபையில் காணப்படுகின்றனர்.

தமிழர்கள் இவ்வாறு துன்பத்தை அனுபவித்து வரும் நிலையில்தான் ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது தொடர்பாக ஆராய்ந்து வருகிறது. அதற்கு முன்பு அரசு மேற்கொண்டுவரும் பயங் கரவாத நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

அரசின் பயங்கரவாதத்தைக் கண்டிக்காது புலிகளைக் கண்டிக்கும் நடவடிக்கையில் ஐரோப்பிய ஒன்றியம் ஈடுபட்டிருப்பது வேதனை தருகிறது. எமது உரிமைகளை நாமே பெறவேண்டியுள்ளது. எமது போராட்டத்தை யாரும் தடுக்க முடியாது. ஆயுதங்களைக் கீழே வைக்கு மாறு கூறும் தகுதி யாருக்கும் இல்லை. நாம் அப்படி வைக்கவும் மாட்டோம் நாம் எமது உயிர் இருக்கும் வரை போராடுவோம் ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்து பெற்ற எமது மண்ணை நாம் இழக்கமாட்டோம். தமிழீழத்தை உருவாக்கியே தீருவோம் என்றார். (கு)

## அழிவிலிருந்து நாட்டைப் பாதுகாக்க அனைத்துமக்களும் முன்வரவேண்டும்

### விமல் வீரவன்ச



எமது நாட்டைப் பாதுகாக்க சமாதானத்தை நிலை நாட்ட வடக்கு -கிழக்கிலுள்ள தமிழ் மக்களை காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உண்மையான உணர்வுகளை வெளிக்காட்டவேண்டுமென்றால் பயங்கரவாதம் முறியடிக் கப்படவேண்டும். இந்தப் பயங்கரவாதத்தை முறியடிக்கச் சரியான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று வகுக்கப் பட வேண்டும். அதனடிப்படையில் எல்லோரும் ஒன்றிணைந்து பயங்கர வாதத்தை அடக்கமுன்வரவேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஷ தெரிவித்தார். நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இம்மாதம் 12ஆம் திகதி வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் கடற்படையினரின் டோரா படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு கண்டனப்பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் இம் மாதம் 12ஆம் திகதி யாழ். வெற்றிலைக் கேணி கடற்பரப் பில் 710 படைவீரர்களை ஏற்றி வந்த கப்பல் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த முற்பட்டனர். அக்கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டு டோரா படகுகளில் வந்த படையினர் தமது உயிர்களையும் இழந்து புலிகளின் தாக்குதல்களை முறியடித்து அந்த 710 படையினரின் உயிரைக் காப்பாற்றினர். அவர்களின் வீரம் பாராட்டத்தக்கது.

710 கடற்படையினர் பயணித்த கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கி அழைத்து வந்த 4டோரா படகுகள் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அப் படகிலிருந்த 8 கடற்படையினர் கொல்லப்பட்டனர். இருந்தாலும் கடற் படையினர் அந்தத் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்து 710 பேரின் உயிரைக்காப்பாற்றினர். இதன் மூலம் புலிகளின் இலக்கை அவர்கள் தோற்கடித்தனர்.

நிராயுதபாணியாகவந்து கொண்டிருந்த 710 படையினர் மீது தாக்குதலை நடத்தி தமிழ் சிங்கள மக்களிடையே இனக் கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதே புலிகளின் திட்டமாக இருந்தது. அது தவிர இவ்வாறான தாக்குதலை மேற்கொண்டு படையினரை உளவியல் ரீதியாக பல வீனப்படுத்தி இலங்கை அரசை அடக்கி இறைமைக்கு பங்கம் விளைவிப்பதும் புலிகளின் மற்றொரு நோக்கம்.

அரச பத்திரிகைகள் இந்த நாட்டு மக்களுக்கும் படையினருக்கும் உற்சாகம் வழங்கும் வண்ணம் செயற்படுவதில்லை. படையினரால் தமிழ் மக்கள் பல்வேறு விதமான தொல்லைகளை எதிர்கொள்ளுகிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இத்தகைய செயற்பாட்டுக்கு நாம் உடன்பாடானவர்கள் அல்லர். இவை நிறுத்தப்படவேண்டும் என்றே நாம் கூறுகிறோம். தமிழ் மக்களுக்கு படையினரிடம் தொல்லைகள் ஏற்படுத்துவதற்கு காரணம் புலிகளின் நடவடிக்கை தான். இந்த நாட்டையும் குறிப்பாக தமிழ் மக்களையும் காப்பாற்ற நாம் ஒன்றிணைய வேண்டும். இன வேறுபாடு அரசியல்வேறுபாடு போன்றவற்றைக் களைந்து நாட்டைப் பாதுகாக்க இந்த நாட்டு மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்றார். (கு)

## ஒய்வுபெறும் மேஜர் ஜெனரல் திருமலை அரச அதிபராகிறார்

திருகோணமலை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி யான மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வாவை நியமிக்க அரசு தீர்மானித்துள் ளது.

கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சரவை இதற்கான அனு மதியை வழங்கியிருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை தற்போதிருப்பதைவிட வினைத்திறனுடன் முன்னெடுக்கும் நோக்கிலேயே இந்த நியமனம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிபாரிசின் பேரில் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் பாது காப்புடன் தொடர்புடைய உயர் பதவிகளை வகித்திருக்கும் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா நேற்று முன்தினத்துடன் இராணுவத்திலிருந்து ஓய்வுபெறுகிறார். இம் மாதம் இறுதியில் திருகோண மலை மாவட்ட புதிய அரச அதிபராக மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா கடமைகளை ஏற்கவுள்ளார்.

ஏற்கனவே வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக படைத் தரப்பின் ஓய்வுபெற்ற உயரதிகாரி யொருவர் நியமிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் மாவட்ட அரச அதிபர் பொறுப்பும் இராணுவ உயரதிகாரி யொருவருக்கு வழங் கப்பட்டிருக்கிறது. (கு)

## இவ்வருட இறுதிக்குள் 24 புதிய தபாலகங்கள்

நாட்டில் தபாலக வசதிகள் இல்லாத இடங்களைத் தெரிவு செய்து இவ்வருட இறுதிக்குள் 24 புதிய தபாலகங்களை ஸ்தாபிக்கவென அரசாங்கம் 230 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாக தபால் தொலைத் தொடர்புகள் மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தி.மு.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இத் தபாலக கட்டங்களுடன் சேர்ந்து அரச ஊழியர்களுக்கான விடுதிகளை அமைக்கத் தீர்மானித் துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் இன்னும் தபாலக வசதிகள் இல்லை. அத்தகைய இடங்களை அறிந்து அவ்வசதியை ஏற்படுத்த துரித நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

நுவரெலியா, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், மாத்தறை, காலி அம்பாறை, இரத்தினபுரி, மொனறாகலை, பதுளை, சிலாபம், மாத்தளை, அநுராதபுரம், பொலனறுவை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலேயே இத் தபாலகங்கள் அமைக்கப்படவுள்ளன. சகல தொழில் நுட்பங்களுடனும் கூடிய நவீன உபகரணங்கள் கொண்ட தபாலகங்களாக இவை அமைக்கப்படு மெனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (கு-9)

## தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



உலகில் எல்லோரும் சுகத்தையே விரும்புகிறார்கள். பலர் அற்ப சுகத்தையே விரும்புகிறார்கள். சிலர் மேலான சுகத்தை விரும்புகிறார்கள். மேலான சுகங்களிலேயே முதன்மையான ஒன்றே ஒன்று முத்திதான்.

சுவாமி விவேகானந்தர்

## புளியங்கூடலில் இளைஞன் மீது சூடு

ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் சுடப்பட்டுள்ளார். சுடப்பட்டவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடமாடும் அழகு சாதனப்பொருட்கள் விற்பனை செய்யும் மாயன் ஜெகதீஸ்வரன் (வயது 29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் வீதியால் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் சுடப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5,15)

## தண்ணீர் பௌசர் கிளைமோரில் சிக்கியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருகோணமலை வீதியை அண்டிய ஊரணி வீதியில் சென்று கொண்டிருந்த இராணுவ தண்ணீர் பௌசர் மீது கிளைமோர்த்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத நபர்களினால் நேற்று மதியம் 12.10 மணியளவில் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் பௌசர் வாகனத்திற்கு சிறிய சேதம் ஏற்பட்டுள்ள போதிலும் அதில் பயணித்த நான்கு இராணுவச் சிப்பாய்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லையென இராணுவத் தரப்புத்தெரிவித்தது.(ச-5)

## நீர்வேலியில் வர்த்தகர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கில் வர்த்தகர் ஒருவர் நேற்று மாலை 5 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு அருகில் உள்ள தனது கடையில் இருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த யசோதரன் (வயது 34) என்பவரே சுடப்பட்டவராவார். இவர் சுடப்பட்டு காயமடைந்த நிலையில் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற சமயம் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. சடலம் யாழ்.போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5,15)

# சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதியுடன் எரிக் பேச்சு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் தற்போதுள்ள நிலைமைகள் மற்றும் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும் ஜனாதிபதி மகிந்தவும் நோர்வே அமைச்சர் எரிக்சொல் ஹெய்மும் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மீண்டும் விடுதலைப்புலிகளை அழைப்பது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்முடனான பேச்சுவார்த்தையில் விரிவாக ஆராய்ந்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர,சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன மற்றும் பாதுகாப்பு,நிதி அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சருடன் நோர்வேயின் விசேட சமாதான பிரதிநிதி ஜோன் ஹான்சன் பௌயர் ,இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை இலங்கை வருகை தந்த எரிக் சொல் ஹெய்ம் நேற்று புதுடில்லி சென்றடைந்தார். புதுடில்லி சென்றிருக்கும் அவர் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்திய அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தவுள்ளார்.

இந்தியாவில் இருந்து யப்பான் டோக்கியோவுக்கு செல்லவுள்ள எரிக்சொல் ஹெய்ம் அங்கு எதிர்வரும் 30-ம் திகதி நடைபெறவுள்ள டோக்கியோ இணைத் தலைமை நாடுகளின் தலைவர்களின் கூட்டத்திலும் பங்குபற்றவுள்ளதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சின் ஊடகம் தெரிவித்துள்ளது. (ச-5)

## தமிழ்ச்செல்வன்- பௌயர் இன்று சந்தித்துப் பேசுவர்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் இன்று சந்தித்துப் பேசவுள்ளார்.

கிளிநொச்சிக்கு இன்று காலை 9.45 மணியளவில் வரும் பௌயர் கிளிநொச்சியில் உள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு சென்று கலந்துரையாடவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்திற்குச் சென்று அவர்களது வேலைத்திட்டங்களையும் பார்வையிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். இலங்கையில் தற்போது நிகழும் அசாதாரண சூழ்நிலையில் இவர்கள் இருவரினதும் சந்திப்பு மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. (ச-5)

## பதிவுகளை மேற்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

2005/2006 ஆம் ஆண்டு கற்கை நெறிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 30ம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளது.

கலைப்பீடத்திற்கு 254 பேரும் நடனத் துறைக்கு 50 பேரும் கர்நாடக சங்கீதத்திற்கு 43 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமது பெயர் விபரங்களை கலைப்பீடாதிபதியின் அலுவலகத்தில் பார்வையிட முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# லெப்.கேணல் வீரமணிக்கு பெருமளவானோர் அஞ்சலி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற லெப்.கேணல் வீரமணியின் வணக்க நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று வணக்கம் செலுத்தியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற நிகழ்விற்கு போராளி சிலைவேந்தன் தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

மாவீரரின் துணைவியார் வித்துடலுக்கான ஈகச்சுடரினை ஏற்றி வைத்ததுடன் மலர் மாலையினையும் அணிவித்தார். இந் நிகழ்வில் கருத்துரைகளை தமிழீழ நீதி, நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா ,சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணித் தளபதி அமுதாப் ஆகியோர் நிகழ்த்தினர்.

வணக்க நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், பொதுமக்கள் என பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்று வணக்கம் செலுத்தியுள்ளனர்.

லெப். கேணல் வீரமணியின் வித்துடல் இன்று காலை கிளிநொச்சிப் பளையிலும், வடமராட்சி கிழக்கு தாளையடியிலும் பிற்பகல் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்திலும் மக்கள் வணக்கத்திற்கு வைக்கப்படவுள்ளது.(ச-5)

## ரட்ணராஜாவுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்

சுட்டுக்கொல்லப்பட்ட வடக்கு கிழக்கு நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்தித்திட்ட மாகாண பிரதிப்பணிப்பாளர் ரட்ணராஜாவுக்கு விடுதலைப்புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கியுள்ளனர்.

இவர் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைப்படைக்குழுவினரால் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். (ச-5)

## மோ. சைக்கிளில் சென்ற...

இதனையடுத்து அவர்கள் தப்பியோட முயற்சித்துள்ளனர். இதன்போது இராணுவத்தினர் அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர்.அவர்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.

இரு இளைஞர்களில் ஒருவர் கைத்துப்பாக்கி மூலம் இராணுவச் சிப்பாயை சுட்டுவிட்டு தப்ப முயன்றதாகவும் அப்போது தாம் சுட்டதால் அவர்கள் உயிரிழந்ததாகவும் இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது.

காயமடைந்த இராணுவச் சிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.இளைஞர் ஒருவருக்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்றும் காணப்பட்டது.

இதேவேளை இறந்த ஒருவரின் அடையாள அட்டை மூலம் அவர் அரியாலை நடுத்தெரு ஒழுங்கையைச் சேர்ந்த மகேந்திரன் பிரதீபன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.மற்றையவர் அடையாளம் காணப்பட வில்லை.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலங்களை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.(ச-5,15)

## வன்முறைகள் மோசமடையுமுன்...

அரசு புலிகளுக்கு எதிரான குழுக்களை கட்டுப்படுத்தவும் ,இரு தரப்பும் வன்முறைகள், கொலைகளை நிறுத்தவும் முடியாததாயின் ஏதேனும் ஒரு நிலையில் சிவில் யுத்தம் மீண்டும் உருவாகலாம்.

இலங்கை வேகமாக வன்முறைகளை தீவிரப்படுத்திக் கொண்டு செல்கின்றது என்றார். இன்றைய வன்முறை நிலைமைகளே தொடரலாம். இன்னும் மோசமாகலாம். பலர் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தினமும்கொலைகள் இடம்பெறுகின்றன. வடக்கு கிழக்கில் மக்கள் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சம்பிரதாய விஜயத்தின் ஊடாக முட்டுக்கட்டைகள் களையப்படவில்லை. ஹான்சன் பௌயர் இன்று விடுதலைப்புலிகளை சந்திக்கவிருக்கின்றார்.

தமக்கென ஒரு தாயகத்தைக் கோரும் விடுதலைப்புலிகள் பேச்சுக்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.

கருணா குழுவின் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.அரசாங்கமோ ஆயுதக்குழுவினர் எவரையும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காணவும் முடியவில்லை என்று கூறிவிட்டது.

ஆயினும் கண்காணிப்பாளர்களும் சர்வதேச சமூகமும், ஆய்வாளர்களும் இது தொடர்பில் சந்தேகங்களை கொண்டிருக்கின்றனர்.

பிரதான விடயம் விடுதலைப்புலிகள் கொலைகளையும் கிளைமோர்த்தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும். அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து கருணா குழு உட்பட ஆயுதக்குழுக்களை நிராயுத பாணிகளாக்க வேண்டும் என சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

கண்ணுக்கு கண் என்ற வகையில் சம்பவங்களுக்கு பழிவாங்கும் வகையில் இரு தரப்பும் முனைந்து நிற்கின்றன. இப்போது நான் ஒவ்வொரு விடயத்தையும் பாரதூரமாகத்தான் கருதுகிறேன்.

இப்போது முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் மோட்டர்த் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. வன்முறைகளின் அதிகரிப்பு முதலீடுகளைப் பாதிக்கவுள்ளதாக அச்ச நிலை தோன்றியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடை செய்யவிருக்கிறது. புலிகளோ இத் தடையினால் யுத்தத்திற்கான சூழல் அதிகரிக்கும் என்கின்றனர்.

உண்மையில் சர்வதேச சமூகத்தினர் மத்தியில் பொறுமையின்மையும் அதிருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. இது தெளிவாகத் தெரிகிறது என்றார் சொல் ஹெய்ம். (ச-5,6)

நிறைஞ்சனாஸ்
விஜய்,சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை
கா.நே: 10.30,2.15,5.30,8.45

சினிமா யாழ்ப்பாணம்
04.05.2006.முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 27.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.